(இ) தற்சமயம் முட்டைப்பொடி இராணுவத்தினரால் குறைந்த அளவே பயன்படுத்தப்படுகிறது.

(ஈ) விற்பனைக் கூடங்களில் முட்டைப்பொடிக்கு வரவேற்பில்லை.

மேலும் பம்பாயில் ஒரு முட்டைப் பொடி தயாரிப்பு நிலையம் உள்ளது. அந்நிலையத்தில் தயாரிக்கப்படும் பொடி இராணுவப் பகுதிகளுக்கு அனுப்பப் படுகிறது. எனினும் இந்நிலையம் முட்டை தயாரிப்பில் முழு இலக்கை அடைய முடியவில்லை. கேரள மாநிலத்தில் பல முயற்சி எடுத்தும் முட்டைப் பொடி தயாரிக்கும் திட்டம் தோல்வியடைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நூறு கிராம் முட்டை பவுடர் ரூ. 12 விலையாகிறது. ஐம்பது கிராம் முட்டையில் 6 கிராம் முட்டைப்பொடி தயாரிக்க முடியும். அதன் விலை 72 காசுகள். ஆனால் 60 கிராம் எடையுள்ள ஒரு முட்டையின் விலை 40 காசுகள் தான். ஆண்டு முழுவதும் முட்டைகளின் சராசரி சில்லரை விலை 0.33 காசுகள்தான். முட்டைப்பொடி தயார் செய்து விற்பனைக்கு அனுப்ப வேண்டுமாயின், தனி முட்டையின் விலை 25 காசுகளுக்குக் குறைவாக கொள் முதல் செய்யப்படவேண்டியுள்ளது. இந்த விலை விவசாயிகளுக்கு நஷ்டத்தை உண்டாக்கும். குறிப்பாக, முட்டைப் பொடிக்கு, தற்பொழுது கிராக்கியில்லை. எனவே இம்மாநிலத்தில் முட்டைப் பொடி நிலையம் அமைப்பது சாத்தியமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

சென்னைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருமதி சத்தியவாணிமுத்து, மேலவை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ததாலும், திரு. சி. வி. இராஜகோபால் அவர்கள் மறைவெய்தியதாலும், சென்னை பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு ஏற்பட்ட இரண்டு காலியிடங்களை நிரப்ப வேண்டி- தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் விதாச்சார பிரதி நிதித்துவக் கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ளது என்று தான்

1978 செப்டம்பர் 1] [மேலவைத் தலைவர்]

அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப்பட்டுள்ளன :

வேட்பு மனுக்கள் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளும், நேரமும்	7—9—1978 பிற்பகல் 5 மணி
வேட்பு மனுக்களை சரி பார்த்தல்	7—9—1978 பிற்பகல் 6 மணி
வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும்	8—9—1978 பிற்பகல் 5 மணி
தேவை ஏற்படின் வாக்குப் பதிவு நடை பெறும் நாளும், நேரமும்	11—9—1978 பிற்பகல் 1 மணி முதல் 6 மணி வரை

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. உரிமைப் பிரச்சினை.

சென்னை, வானொலியில் மேலவை நடவடிக்கைகளைப்பற்றி அறிவிப்பு இல்லாதது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மேலவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரிமைப் பிரச்சினையைப் படித்து விடுகிறேன் :—

I request the permission of the House to raise a matter of Privilege under Rule 157 of the Tamil Nadu Legislative Council Rules, the matter being

"The failure of the All India Radio, Madras to report anything of the Proceedings of this House held on 31st August 1978 in its Regional News Bulletin in Tamil at 6-30 p.m. on 31st August 1978".

மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலச் செய்திகளைப் பொறுத்த வரையில், நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் மாநிலச் செய்தியில் இடம் பெறவில்லை என்பது மட்டுமல்ல, இந்த அவை கூடிய தகவல்கூட சொல்லப் படவில்லை. அது மட்டுமல்ல, மாநிலச் செய்திகளைப் பொறுத்த வரையிலே, இன்றைக்கு தமிழகத்திலே மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கின்ற சட்டமன்றம் நடைபெறுகின்ற போது, மாநில மக்கள் பொது இடங்களிலும் மற்ற இடங்களிலும் நின்று அன்றாடம் சட்ட மன்றங்களிலே நடைபெறுகின்ற